**பெயர்: ஜனனி ராமு சரவணன்**

**ராஃப்பிள்ஸ் பெண்கள் தொடக்கப்பள்ளி**

**தொடக்கநிலை 5**

சிங்கப்பூரில் பல இன மக்கள் ஒற்றுமையாக வாழ்கின்றனர். இவ்வாண்டு, சிங்கப்பூர், தன் ஐம்பத்து ஆறாம் பிறந்த நாளை கொண்டாடுகிறது. அவ்வாறு இருக்கும்போது, நாம் இன நல்லிணக்கத்துடனும் ஒற்றுமையுடனும் இருந்து, சிங்கப்பூருக்கு பெருமை சேர்க்க வேண்டும். இன நல்லிணக்கத்தை பற்றி சிந்திக்கும்போது, ஓர் இனிய அனுபவம் எப்போதும் என் ஞாபகத்திற்கு வரும். இன்றும் கூட, அந்த அனுபவத்தைப் பற்றி நினைக்கும்போது என் முகத்தில் புன்னகை மலரும்.

நான்கு வருடங்களுக்கு முன், நான் வசிக்கும் கூட்டுரிமை வீடு கட்டடத்திற்கு ஒரு சீன குடும்பம் குடியேறி வந்தது. அந்த குடும்பத்தில் மூன்று பிள்ளைகள் இருந்தனர். அவர்களில் ஒருத்தி என் வயதைச் சேர்ந்த ஒரு சிறுமி. அவளது பெயர் யிங் யிங். ஆரம்பத்தில் அவள் மின்தூக்கியில் என்னை சந்திக்கும்போதெல்லாம் பேசுவதில்லை. ஆனால், ஒரு சமயம், நாங்கள் எங்கள் கூட்டுரிமை வீட்டின் நீச்சல்குளத்தில் சந்தித்தோம். அவள் அவளுடைய தம்பிகளுடன் இருந்தாள். என்னுடன் விளையாட யாருமில்லாததால், நான் யிங் யிங்யிடம் சென்று, அவளுடன் விளையாடலாமா என்று கேட்டேன் . அவள் கொஞ்சம் தயக்கமாக இருந்தாள். ஆனால், நான் அவளுடன் என் விளையாட்டுப் பொருள்களை பகிர்ந்து விளையாடியபோது, அவள் மிகவும் மகிழ்ச்சியாக என்னுடன் பழகினாள். நாம் மகிழ்ச்சி கடலில் நீந்தியவாறு விளையாடினோம். எனக்கு மிகவும் சந்தோஷமாக இருந்தது.

அடுத்த பல வாரங்களுக்கு, நாம் இருவரும் நீச்சல் குளத்தில் சந்தித்து விளையாடினோம். காலம் செல்ல, நாம் இருவரும் இணைபிரியாத நண்பர்களாக மாறினோம். யிங் யிங் உடன் மேலும் பழகியபோது அவளின் பெற்றோர்கள் சீனாவில் பிறந்து வளர்ந்தவர்கள் என்றும், 10 வருடங்களுக்கு முன்னால்தான் அவர்கள் சிங்கப்பூர் குடியுரிமை பெற்று இருந்தார்கள் என்றும் தெரிந்து கொண்டேன். மற்ற இன பிள்ளைகளுடன் அதிக பழக்கம் இல்லாததால், யிங் யிங் என்னுடன் முதலில் பழக தயங்கியதாக கூறினாள் .ஆனால் எனது அன்பை கண்டு வியந்து, அவள் என்னை உற்ற தோழியாக ஏற்றுக்கொண்டுள்ளதாக கூறினாள். நாம் இருவரும் நகமும் சதையும் போல பழகி வந்தோம்.

2019 ஆம் ஆண்டு தீபாவளி நெருங்கியது. தீபாவளியை என்னுடன் கொண்டாட நான் யிங் யிங்யை என் வீட்டிற்கு அழைத்தேன். முதலில் அவள் என் வீட்டிற்கு வர தயக்கமாக இருந்தாள். ஆனாலும், தீபாவளியின் அன்று, அவள் என் வீட்டிற்கு வந்தாள். அவள் வந்தவுடன், நான் அவளுக்கு பலவிதமான பலகாரங்களை கொடுத்தேன். அவளும் அவற்றை விரும்பி சாப்பிட்டாள். பிறகு, நான் அவளிடம் தீபாவளியில் நாம் என்ன செய்வோம், தீபாவளியை எதற்காக கொண்டாடுகிறோம் என்பதை பற்றி

கூறினேன். அவள் அதை ஆர்வத்துடன் கேட்டாள். நான் அவளுடன் சில விளையாட்டுகளை விளையாடி, அவளுடன் பேசி முடித்தவுடன், அவள் குடும்பத்தாருடன் பகிர்ந்து கொள்வதற்கு சில பலகாரங்களை பொட்டலம் செய்து கொடுத்தேன்.

அடுத்த வருடம், சீன புத்தாண்டு வந்தது. அவள் என்னை தன் வீட்டிற்கு அழைத்தாள். அவள் பாரம்பரிய உடையில் மிகவும் அழகாக இருந்தாள். அவள் அம்மா தயாரித்த சில உணவு வகைகளை என்னிடம் தந்தாள். “ஜனனி, நீ கவலைப்படாதே! இந்த உணவு வகைகள் எவற்றிலும் மாட்டு இறைச்சி சேர்க்கப்படவில்லை,” என்று கூறியதை கேட்டு நான் வியப்படைந்தேன். இந்து மதத்தை சேர்ந்த நான் மாட்டு இறைச்சி சாப்பிட மாட்டேன் என்று தெரிந்துகொண்டு, யிங் யிங் எனக்கு தக்க உணவு வகைகளை கொடுத்திருந்தாள். அவை மிகவும் சுவையாக இருந்தன. நான் அவற்றை மிகவும் ஆர்வத்துடன் சாப்பிட்டேன். பிறகு நாங்களும் அவள் தம்பிகளும் சீன சதுரங்கம் போன்ற சீன விளையாட்டுகள் விளையாடினோம்.
வீட்டிற்கு செல்லும்போது, யிங் யிங் என்னிடம் சில பலகாரங்களை கொடுத்தாள்.

இந்தப் பகிர்வுகளுக்குப் பிறகு, எங்கள் பெற்றோர்களும் நல்ல நண்பர்களாகி விட்டார்கள். வெவ்வேறு இனம், மற்றும் மதம், கொண்ட யிங் யிங்உம், நானும், அன்பையும், புரிந்துணர்வையும் காட்டி ஒருவருக்கொருவர் நல்ல தோழிகளாக இருந்து வருகிறோம். நானும், யிங் யிங்உம், எப்போதும் ஒற்றுமையாகவும் இணைபிரியாத தோழிகளாகவும் இருப்போம். யிங் யிங்யைப் போன்ற ஒரு தோழி எனக்கு கிடைத்தது எனக்கு மிகவும் சந்தோஷத்தை அளிக்கிறது. சிங்கப்பூரர்கள் ஆகிய நாம் எப்போதும் இன நல்லிணக்கத்துடன் இருக்க வேண்டும். ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்பதை மறக்காமல், நாம் இன நல்லிணக்கத்துடன் இருப்பதுதான் சிங்கப்பூருக்கு பெரும் வெற்றி.